## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முளைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருஹுணு பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியம் மற்றும் ஒதுக்க மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்நியமங்களின் கீழான எனது பொறுப்பு எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டுவதன் செயற்படுத்தப்படுகின்றன. தவறாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாமல் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வ அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகிய உருப்படிகளின் நியாயமான பெறுமதி | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக உள்ள 28 காணிகள் காணப்படுவதுடன் அதன் பரப்பளவு 58573.99 பேர்ச் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொரு 03 ஆண்டுகள் அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக உள்ள 28 காணிகள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆக இருந்ததுடன் மேற்படி கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அரசின் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீட்டின் போது அச்சொத்துக்களின் முழு வகுப்பும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 51 வாகனங்களில் 31 வாகனங்கள் மாத்திரம் மீளாய்வாண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அத்தோடு மீள்மதிப்பீடு செய்த 24 வாகனங்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை காரணமாக வாகனங்களின் பெறுமதி மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 27,776,400 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | 2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாக கொணடு குறித்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் 1.2(ஆ) பந்தியின் மூலம் அவ்வாண்டுகளில் மீள்மதிப்பீடு செய்ய முடியாதென அறிவிக்கப்பட்டிருந்த 08 வாகனங்களுக்காக மாத்திரம் நடப்பாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய மென்பொருட்களுக்கு அனுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,064,387 தொகையான செலவினம் வருமானச் செலவினமொன்றாக இனங் காணாமல் கற்பனைச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக அப்பெறுமதியால் ஆண்டின் செலவினம் குறைத்தும் கற்பனைச் சொத்துக்கள் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். கொடுக்கல் வாங்கலை இனங்காணும் போது தவறுதலாக கோட்பாட்டு தவறொன்று இடம்பெற்றுள்ளதாக | மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 4,123,108 ஆன நிலையான சொத்துக்கள் பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் பெறுமதி மாற்றப்படாத மூலதன வருமானமாக சீராக்கியதன் காரணமாக ஆண்டின் மூலதன மிகை அப்பெறுமதியால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன்.மேற்படி சீராக்கம் நடப்பாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டதால் தவறு இடம் பெற்றுள்ளதாக | ஆண்டிற்குரிய பங்களிப்புக்கள் சரியாக இனங்கண்டு ஆண்டின் மூலதன வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உடன்படிக்கை மீறியதன் பேரில் விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,964,256 தொகை மீளாய்வாண்டில் முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளாமல் நிதிக்கூற்றுக் களிலிருந்து பதிவழிக்கப் பட்டிருந்தது. | 2020.09.28 ஆந் திகதி நடைபெற்ற 408 ஆவது நிர்வாக சபை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த பிணை முறியின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகத்தினால் விரிவுரையார்களுக்கு தனிப்பட்ட அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த புலமைப் பரிசில்களின் பெறுமதி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டதாக | அறவிடப்பட வேண்டிய பணத்தை பதிவழிப்பதற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் பிற்போடப்பட்ட பாடநெறி வருமான மீதி ரூபா 207,555,076 ஆக இருந்த போதும் குறித்த பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 197,886,816 ஆக இருந்தமையால் ரூபா 9,668,260 ஆன இணக்கமின்மை ஒன்று இருந்தது. | 26 ஆம் இலக்க குறிப்பின் கீழ் 2022.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் பட்டப்பின் தொலைக்கல்வி அலகின் உரிய வெளிவாரியாக உருவாக்கப்பட்ட பாடநெறிகளின் பிற்போடப்பட்ட வருமானம் மாத்திரமே காண்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதி நிலைமை கூற்றில் ஒட்டு மொத்த பாடநெறி களுக்குரிய பிற்போடப்பட்ட வருமானமே காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் 2022.12.31 இல் உள்ளவாறு உள்ளக மாணவர்களுக்காக நடாத்திச் செல்லப்படும் மொழிப் பாடநெறிகளின் பிற்போடப்பட்ட வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளதாக | நிதி நிலைமைக் கூற்றின் மீதி மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் சமமாக இருத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| **விடயம்** | **தொகை** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| நானாவித வைப்புக்கள் | 1,857,250 | உரிய **விபரங்கள்** | பிரதேச செயலகங்களுக்கு செலுத்த வேண்டிய வைப்பு தொகை **2012** ஆம் ஆண்டு முதல் நிதிக் | தேவையபள தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க |

| | | | |
|---|---|---|---|
| | | கூற்றுக்களில் இருந்து வருவதாக | வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 394 | பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 6,087,813 தொகையான வழங்கப்பட்டிருந்த 146 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அக்காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | காலம் நீடிக்கப்படாத மற்றும் மீண்டும் காசோலையொன்று வழங்கப்படாத இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 394 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 888,979,918 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,468,177,792 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 579,197,874 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு அரசின் மூலதன மானியங்கள் உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடை குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2006, 2008 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கை மீறியதன் பெயரில் 30 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 157,953,261 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பணத்தை அறவிடுவது இடம்பெற்று வருவதாகவும் பணத்தை செலுத்தாதவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் | குறித்த பணத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) | 2021 ஜுன் 17 ஆந் திகதிய 413 ஆவது நிர்வாக சபை தீர்மானத்தின் பிரகாரம் 2020 ஜனவரி முதல் அமுலாகும் வகையில் உத்தியோக பூர்வ | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாக அவர்கள் இரண்டு பேர்களின் வேண்டுகோளின் பிரகாரம் காணப்படும் கட்டணத்தின் கீழ் | வீட்டு வாடகை வருமானம் விரைவில் அளவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | விடுதி வாடகை கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு இருந்த போதும் அவ்வாறு அதிகரிக்கப்பட்ட வாடகை 2020 ஜனவரி முதல் 2021 ஒக்டோபர் மாதம் வரையான 22 மாதங்களுக்காக வெள்ளமடம வளவில் குத்தகை வீடுகளில் இருந்து அறவிடப்படாமை காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3,589,800 ஆன நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டி இருந்தது | அவ்வீடுகளில் குடியிருக்கக்கூடிய காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டது எவ்வாறாயினும் ஏனைய இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை அதாவது 2023.07.31 இற்கு முன்னர் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உங்களுக்கு அறிக்கையிடுவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | |
| (இ) | சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்ற விரிவுரையாளர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 19 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,295,498 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பல்கலைக்கழக பணிக்கொடை நிதியம் விடுவிக்கப்பட்ட உடன் குறித்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை கடன்கள் தாமதம் இன்றி அறவிடப்பட வேண்டும் |
| (ஈ) | முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடங்களின் பேரவை கூட்ட மண்டபத்திற்கு தளபாடங்கள் மற்றும் பொருத்திகளை கொள்வனவு செய்வதற்காக 2021 மார்ச் 31 ஆந் திகதி முதலாவது கேள்வி கோரலின் போது குறித்த இடத்தை பரீட்சிக்கமையால் அந்தக் கேள்வி மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதி இரண்டாவது தடவை கேள்வி கோரிய போது முதலாவது கேள்வி கோரலின் போது குறைந்த விலையை சமர்ப்பித்த கேள்விதாரரால் இரண்டாவது தடவையும் குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் முதலாவது மற்றும் இரண்டாவது விலை ஒப்பீட்டின் போது பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,166,720 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது | விலை கோரலின் போது அனைத்து தரப்பினராலும் பல்கலைக்கழகத்தின் புதிய பேரவை கூட்ட மண்டம் பரீட்சிக்கப்பட்டு அதற்கு இணங்கும் வகையில் குறித்த தளபாடங்களை வழங்குவதற்கு ஆய்வொன்று மேற்கொண்டு விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் முதலாவது விலைகோரின் போது புதிய பேரவை கூட்ட மண்டபத்தை பரீட்சிப்பதற்கு எந்த ஒரு வழங்குனரும் வருகை தரவில்லை. அதனடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் குறித்த விலைவிபரங்களை மதிப்பீடு செய்யாமல் அந்நிபந்தனை கட்டாயமாக பூர்த்தி செய்தே கூறுவிலை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தலைவரின் கையொப்பத்துடனான அறிக்கை ஒன்று முன் வைக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் புதிய விலை கோரல் கோரப்பட்டதாக | பல்கலைக்கழகத்திற்கு பொருளாதார ரீதியாக சாதகமான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் மொபிடெல் நிறுவனத்தினால் பல்கலைக்கழகத்தின் வளவில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த தொலைபேசி கோபுரங்களுக்காக | தொலைபேசி கோபுரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பாக இயலளவு பதிவேடு குறித்த நாட்குறிப்பு பதிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக | முறையான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குறித்த பணம் தாமதம் இன்றி |

| | | |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2,936,263 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. | | அறவிடப்பட வேண்டும் |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறியியல் பீடத்திற்காக 2019,2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அரஹெட் திட்டத்திலிருந்தும் பல்கலைக்கழக நிதியத்தில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் 1,229,925 பெறுமதியான கணணிகள் மற்றும் 12 உபகரணங்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டன | பீடாதிபதியின் அனுமதியின் கீழ் தற்காலிக அடிப்படையில் கணனியின் 6 மத்திய செயற்பாட்டு அலகுகள் மாத்திரம் விரிவுரை மண்டபத்திற்கு வழங்கப்பட்டன ஏனைய பகுதிகளான திரை மற்றும் சாவிப்பலகை என்பன கணனி நிலையத்தில் பொதியிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளன 03 கணனிகள் கணணிகளின் செயற்பாட்டு முறைமையில் தவறுகள் காரணமாக செயலற்று இருப்பதால் அக்கணனிகளை பரீட்சிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக தற்காலிகமாக பழைய கணனி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உள்ளதாக | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் பொருட்களை பொறுப்பேற்பதற்கு முன்னர் அவற்றை பரீட்சித்து அதன் தகைமை தொடர்பில் திருப்தியடைய வேண்டும் அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் மாதத்தின் போது பொறியியல் பீடத்திற்காக ரூபா 31,474,800 தொகை செலவிடப்பட்டு 280 மேசை கணனிகள் (i5) கொள்வனவு செய்யும் போது வழங்குனரால் உடன்படிக்கை செய்யப்பட்ட வழங்கல் காலத்தை நீடிக்கப்படாமல் வழங்கள் தாமதித்தமை காரணமாக அறவிடப்பட்ட தாமத கட்டணங்களில் 50 சதவீதமான ரூபா 1,748,600 தொகையை முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டில் வழங்குனருக்கு மீண்டும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | 2022.01.25 ஆந் திகதி நடைபெற்ற திணைக்கள பெறுகை குழு பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த கழிப்பனவுகளில் இருந்து 50 சதவீதம் மீண்டும் செலுத்தப்பட்டதாக | பெறுகை குழு பரிந்துரைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமல் இருந்துடன் உடன் படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |